REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 304

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY! THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஒன்று	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஒன்று	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 22உ வெள்ளி (4-6-54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 23உ சனி (5-6-54)

கோவாவில் போர்ச்சுகல் பிடி நீடிக்க!

போலி வாக்கெடுப்பு நாடகம்!

தாசர்களைக் கொண்டு ஆதரவேடு திட்ட திட்டம்

போர்ச்சுகல் அரசாங்கத்தின் சதி!

போர்ச்சுகல் ஆதிக்கத்தில் கோவா இருந்து வருகிறது.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பிரெஞ்சிந்தியாவில் அறப்போர் நடைபெறுவது போலவே, கோவாவிலும், விடுதலை போர்க் கொடி உயர்த்தப்பட்டிருக்கிறது, மக்களால்!

ஏகாதிபத்தியங்களின் இயல்புப்படி, கோவாவிலும், உரிமை கேட்கும் மக்கள்மீது அடக்குமுறை அம்புகள் வீசப்படுகின்றன. உரிமைப் போர் ஒடுங்கவில்லை; கூடிய உத்வேகத்தோடு கிளம்பிய வண்ணம் உள்ளது.

உலகக் கருத்து அனுதாபம் விடுதலை விரும்பிகளுக்கு ஆதரவாகத் திரண்டு கொண்டு இருக்கிறது. உலக வெறுப்பு, பிரான்சு—போர்ச்சுகல் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக வளர்ந்து கொண்டு போகிறது.

இதை மாற்ற வேண்டிய கவலை—கட்டாயம் ஏகாதிபத்தியங்களுக்கு.

பிரெஞ்சு ஏகாதிபத்தியம், பொதுமக்கள் ஒப்புதல் பெற வேண்டும் என பசப்புகிறது—அடம் பிடிக்கிறது! அரசியல் சட்டத்தில் ஆதாரம் காட்டுகிறது!

கோவாவில் மூண்டுள்ள உரிமைக் கனலை, உலகத்தவர் கண்களுக்குத் தெரியாமல், தடுக்க 'வாக்கெடுப்பு' எனச் சாகசத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறது. வாக்கெடுப்பு, கோவாவிற்கு 'விடுதலையா? அடிமைத்தனமா?' என்ற பிரச்சினையை முன்னிறுத்தி அல்ல!

கோவாவில் உள்ள குடிமக்கள், போர்ச்சுகல் தரும் 'அடிமை சுகத்தை' ஆக மகிழ்வோடு ஆதரிக்கிறார்கள்—வாழ்த்துகிறார்கள்—நீடித்து இருக்க வேண்டுமெனத் தவம் கிடக்கிறார்கள் என்பதை, உலகுக்கு உணர்த்தவே, 'வாக்கெடுப்பு' நாடகம் வைக்க இருக்கிறதாம் போர்ச்சுகல் அரசாங்கம்!

அருமையான அரசியல் கூத்து! குட்டி ஏகாதிபத்தியம் உருவாக்கும் ஆதிக்கச் சதி!

விசித்திர 'வாக்கெடுப்பு'க்குச் செலவிடுவதற்கென 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறதாம்.

சிற்றூர் தலைவர்கள், கிராமக் குடிகளை கோவா நகருக்குக் கூட்டிவர வேண்டுமாம்,

வாக்கெடுப்பு தினத்தில்! அறுசுவை உணவும், அருந்த குளிர் பானமும் தர (4-ம் பக்கம் பார்க்க)

மீண்டும் ஆச்சாரியார் தொல்லை

சென்னை, ஜூன் 4—

"என் கல்வித் திட்டம் ஆதாரக் கல்வியை நோக்கி முன்னேறும் ஒரு படி போன்றதே! புதுக் கல்வித் திட்டம் வரவேற்கப்பட்டதால், இப்போதுள்ள முறை நீடிக்க வேண்டுமென்பதில்லை.

'மக்கள் ஆதாரக் கல்வி பெற வசதி செய்யும் வேறு நல்ல திட்டமொன்றை சர்க்கார் தயாரிப்பார்களென்றால் அதை அக்கறையுடன் எதிர்பார்ப்பேன்."

—இவ்வாறு சென்னையின் முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார் நேற்று மாலை தன்னைச் சந்தித்த காங்கிரஸ் பொதுக் காரியதரிசி அகர்வாலிடம் கூறினார்.

'கல்வித் துறையில் எந்த சர்க்காரும் தலையிடக் கூடாது'

ஆச்சார்யா வினோபா பாவே முறையீடு

"கல்வி இலாக்கா, சர்க்காரின் நிர்வாகத்தில் இருக்கக் கூடாது! மாணவர்களுக்கு ஒருதலைப் பட்சமில்லாத கல்வி தரப்பட்டால் ஒழிய, வருங்காலம் இருட்குகையாகவே இருக்கும்,"

என்று ஆச்சாரியா வினோபாவே ஆரோ எனும் இடத்தில் பிரார்த்தனைக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சர்க்கார் கல்வி இலாக்காவை நிர்வகிப்பதினால், எப்படிப்பட்ட கல்வியை அந்த சர்க்கார் விரும்புகிறதோ அந்தக் கல்வியையே மாணவர்களுக்கு அது போதிக்கிறது. அமெரிக்காவில், 'மாணவர்களுக்கு கம்யூனிசம் உலகத்திற்கே ஆபத்தானது,' என்று போதிக்கப்படுகிறது."

"கம்யூனிச நாடுகளில், முதலாளித்துவ அரசாங்கங்கள் பெரும் கொடுமைக்காரர்கள் என்று போதிக்கப்படுகிறது"

"இது இன்றைய உலகத்தில் நெருக்கடிகளை உண்டுபண்ணியுள்ளது."

பொதுக்கூட்டத்தில் குழப்பம்!

கம்யூனிஸ்டு எம். எல். ஏ. காயமடைந்தார்

ஐதராபாத், ஜூன். 2—

கம்யூனிஸ்டு கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் பேசிக்கொண்டிருந்த தோழர் ஏ. லக்ஷ்மி நரசிம்ம ரெட்டி, கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தின் விளைவாக சிறு காயங்களுக்கு ஆளானார்; அவருடன் இருந்த சிலருக்கும் காயங்கள் ஏற்பட்டன.

இந்தக் குழப்பம், கம்யூனிஸ்டு கட்சியினருக்கும் பொது மக்களுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பின் விளைவு என்று சொல்லப்படுகின்றது.

என்றாலும், போலீசார் சரியான சமயத்தில் தலையிட்டு அமைதியை நிலைநாட்டியதால், தொடர்ந்து கூட்டம் நடைபெற இயன்றது.

கயானாவில் சர்வாதிகாரம்!

விடுதலை இயக்கத்துக்குத் தடை

ஜார்ஜ்டவுன், ஜூன் 3—

பிரிட்டிஷ் கயானாவில் விடுதலை இயக்கத்தை நடத்தும் மக்கள் முன்னேற்றக் கட்சி தடை செய்யப்படலாம் என்று உத்தியோக வட்டாரங்களின் மூலம் தெரிகிறது.

டாக்டர் ஜேகன் தலைமையில் கயானா மக்கள் பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுபட விடுதலைப் போர் நடத்தி வருகின்றனர்.

509 பேர் கைது

கிழக்கு வங்கத்தில் இதுவரையில் 509 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இவர்களில் 50 பேர் கம்யூனிஸ்டுகள் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

காங்கிரஸ் தலைவர் மீது நம்பிக்கையில்லை

குண்டர்களுக்குக் காங்கிரசார் உதவி?

அகமத்நகர், ஜூன் 3—

மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர் எஸ். பாரதி என்பவர் மீது ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அவரை பதவியை உடனடியாக ராஜினாமாச் செய்யுமாறு நகர காங்கிரஸ் கமிட்டியினர் கோரியுள்ளனர்.

தோழர் ஜாதவ் என்பவரைக் கைது செய்து பாதுகாப்பில் வைத்ததைக் கண்டித்து கூட்டங்களில் பேசியதாகவும், மாவட்டக் காங்கிரசின் அதிகார பூர்வமான வார இதழில் இதுபற்றி இரண்டொரு முறை எழுதியதாகவும், அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக 12 ஓட்டுகளும் எதிராக இரண்டு ஓட்டுகளும் கிடைத்தன.

மேலும் அகமத்நகர காங்கிரஸ் கமிட்டி, பொது உறுப்பினர் கூட்டமொன்றைக் கூட்டி நகரத்தில் உலவும் ஒரு குண்டர்கள் குழுவைப் பற்றியும் இந்தக் குழுவினருக்கு காங்கிரசின் ஒரு பிரிவினர் உதவி வருவது பற்றியும் விசாரிப்பதெனவும் முடிவு செய்தது.

மக்கள் தலைவர்கள் டிஸ்மிஸ்

புகாண்டாவில் பிரிட்டன் அடக்குமுறை வலுக்கிறது

கம்பாலா, ஜூன் 3—

புகாண்டாவில் எட்டு சுதேசித் தலைவர்கள் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டிருக்கின்றனர்.

அவர்களுடைய நடத்தை, விசுவாசம், இப்போதைய நிலைமையை சமாளிக்க அத்தலைவர்களுக்குள்ள தகுதி பற்றி விசாரணை நடத்தியதின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கம்பாலா (பிரிட்டிஷ்) சர்க்காரின் அறிக்கை கூறுகிறது.

எஸ். எஸ். எல். சி.

56 சத விகிதம் தேர்வு

சென்னை, ஜூன் 3—

சென்ற மார்ச்சில் சென்னை மாகாணத்தில் 53,000 பேர் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதினர். அதில் வெற்றி பெற்றவர்கள் எண்ணிக்கை 29,680 பேர் ஆகும்.

தேர்தலில் 49 சத விகிதத்தினர் வெற்றி பெற்றனர் என்றும், 'மாடரேஷன் போர்டார்' 56 சத விகிதமாக உயர்த்தினர் என்றும் தெரிகிறது.

தனி நாடு வேண்டும்

பர்மா முஸ்லிம்கள் கோரிக்கை

இரங்கூன், ஜூன் 3—

வடமேற்கு அரக்கானில் தனி சுய ஆட்சியுள்ள முஸ்லிம் ராஜ்யத்தை அமைக்க பர்மிய சர்க்கார் வற்புறுத்தப்படும்.

கரேன் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதை ஒட்டி இக்கோரிக்கை விரைவில் வற்புறுத்தப்படும் என்று தெரிகிறது.

ஏப்ரல் மத்தியில் டாங்புரோவில் நடந்த வடமேற்கு அரக்கான் முஸ்லிம் தலைவர்கள் மாநாட்டில் இந்தத் தனி முஸ்லிம் ராஜ்யம் கோருவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இக்கோரிக்கை உடனே பர்மா சர்க்காரிடம் தரப்படும்.

இவர்கள் கோரும் தனி நாட்டின் பரப்பளவு 4,000 சதுர மைல் ஆகும்.

வேலூர் அழைக்கிறது! வீரர்காள்! வாரீர்! ஜூன் 19—20

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 4—6—54 வெள்ளி

புதுவை விவகாரம்!

பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து, நாம் விடுபட்டாக வேண்டுமே என்ற விழுமிய எண்ணம், பிரெஞ்சிந்திய மக்களிடம் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி மூன்று திங்களை நெருங்குகிறது. ஒரு ஏகாதிபத்தியத்தின் எடுபிடியாக உள்ளனர் என்ற இழி சொல்லைத் தாங்கிக்கொண்டு உயிர் வாழ்வதை பிரெஞ்சிந்திய மக்கள் வெறுக்கின்றனர். தக்க தருணம் பார்த்து, சுதந்திர பிரகடனத்தைச் செய்துவிட்டார் குபேர் துரை—இல்லை—ஈ ஜி பிள்ளை என்ற நவீன காங்கிரசார்!

விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே சேர்ந்து ஏற்றிய விடுதலைச் சுடர். இன்று பெரும் காட்டுத் தீயாகப் பரவிவிட்டது. இரண்டொரு அரசியல் சூதாடிகள் விமர்சனம் செய்வது போன்றே, குபேர் தொடுத்த விடுதலைப் போருக்கு விளக்கம் இருக்குமானாலும், பிரெஞ்சிந்திய மக்களின் விடுதலை வேட்கை புதுக்கோலம் பூண்டது, அதனால்தான் என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முனைவது, கண்ணுக்கு நேரகக் கண்ட வரலாற்று உண்மையை ஒழித்துக்கட்டப் பார்க்கும் சிறு செயலுக்கே ஒப்பாகும். மக்களின் விடுதலை ஆர்வ வெள்ளத்தில், சொந்தக் கட்சியை முழுக்கி புனிதப்படுத்தலாம் என மனக்கோட்டைக் கட்டிக் கிடந்த அரசியல் எத்தர்கள் தான், விடுதலை முயற்சிக்கு பொருத்தமற்ற வெவ்வேறு வியாக்கியானங்களைக் கூறக் கிளம்புவர். மக்கள் சந்தையில் மலிவான சரக்கு இது. இந்த மலிவான கழிவுப் பொருளை நம்பியே, தங்கள் கட்சியின் எதிர்காலத்தை வளர்க்கத் திர்மானித்து திட்டம் தீட்டும் திருமேனிகளும், இம்மக்களின் எழுச்சிக்குச் சொந்தம் கொண்டாடத் துடிக்கும் ... மூலாம் பூசமுனைந்தன.

அதனால், புனிதமான விடுதலைப் போர், கட்சிகள் நடத்தும் பலப் பரிட்சைப் போர்க்களமாக மாறத் தொடங்கியது. இன்றும், இந்த ஆபாச அவலநிலை சீர்பட்டுவிட்டதாகச் சொல்வதற்கில்லை. தற்காலிகமாக அடங்கி இருக்கிறது; எந்த நிமிஷத்திலும் தலைதூக்கலாம் என்ற பயம் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

ஏகாதிபத்தியத்தின் அடிப்படை ஒன்றேயாயினும், ஒவ்வொரு ஏகாதிபத்தியத்தின் நடைமுறைகளில் மாறுபாடுகள் உண்டு. குழந்தையின் கழுத்தைத் திருகி விட்டு, கனகக் காதோலையைக் களவாடுபவனுக்கும், இன்பண்டம் தந்து மயங்கச் செய்து பொன்னைக் கொள்ளை கொள்பவனுக்கும் உள்ள தாரவேற்றுமை, ஏகாதிபத்தியங்களின் நடைமுறைகளிலும் இருக்கத்தான் இருக்கிறது.

ஏகாதிபத்தியங்கள் மேற்கொள்ளும் நடைமுறைகளில் தாரவேற்றுமை இருக்கின்ற காரணத்தைக் கொண்டு, எந்த ஏகாதிபத்தியமும் இருந்துவிட்டுப் போகட்டும் என எவரும் வாதிடத் துணியார். ஏகாதிபத்தியம், தனது ஆதிக்க நீடிப்புக்கு மேற்கொள்ளும் செயல்களில் நயமிருந்தாலும், மிரட்டலிருந்தாலும், எந்த ஏகாதிபத்தியமும் ஒழிக்கப்பட வேண்டியதேயாகும். பிரெஞ்சு ஏகாதிபத்தியமும், அவ்விறுதியைப் பெற்றே ஆகவேண்டும்.

எவ்வளவு முயன்ற போதிலும், உலகுக்கு நாட்டுகளின் அறிவுக் கண் திறந்த பின்னர், மடாதிபதி பல்லக்கு ஏறும் ஆசையைத் தூக்கவேண்டும் காலி வேஷத்திற்கும் அது பொருந்துமாறு இருக்கும். இப்போது, புத்தி பெற்றுள்ள மடாதிபதிகள், ஏதோ பட்டத்திற்காகவாவது மடாதிபதியாக இருந்து, தங்கள் இளம் பருவம் விழையும் இன்பசுகத்தை 'ரசித்துத் தொலைக்கலாம்' என்ற நினைப்பில், பல்லக்கைத் துறந்து, வேகமாகச் செல்லும் 'மோட்டாரை' வாகனமாகக் கொள்ளவில்லையா? பிடாரன் பெட்டியில் இருந்தாலும், கறையான் எடுத்தப் புற்றில் இருந்தாலும் அரவம், அரவம்தானே!

பிரெஞ்சு ஏகாதிபத்தியம், இந்தோ-சீனத்தின் அடிமேல் அடி வாங்குகிறது. விடுதலைப் போர்வீரர், வெடிகுண்டுகளை வீசுகிறார்கள், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்து துருப்புகள் மீது!

ஏகாதிபத்தியக் கருப்புகள், வரலாற்றுப் புழுமாசு தேடிக்கொண்டு, குயவன் உருவாக்கிய மண் பாண்டங்கள் போன்று சுக்குநூறுகின்றன! மக்களின் மனமாற்றமும், விடுதலை ஆர்வம் தரும் நெஞ்சுரமும் தெரிந்து கொள்ள பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுக்கு அறிவு இருப்பதாகத் தெரியவில்லை. மக்களின் மனநிலை தெரிந்து பல்லக்கை வெறுத்து, வேறு வாகனத்தில் பவனிவரும் 'அறிவாளி' மடத் தம்பிரான்களுக்குத் தெரிந்துள்ள குட்சமம்கூட பிரெஞ்சு ஏகாதிபத்திய அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை. பிரான்சின் பிடிவாதம் தோல்விமேல் தோல்வி கண்டுவருகிறது! மக்கள் எழுச்சி வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறது!

"உதைத்து விரட்டிக் கொண்டிருக்கிற இடத்திலேயே நான் கண்ணியமாகக் காலி செய்ய மறுக்கின்றபோழுது, 'வெளியே போ' என உரக்கக் கூறுவதற்கா அஞ்சி, நான் கடையைக் கட்டுவேன்" என பிரெஞ்சு ஏகாதிபத்தியம் கேட்பதுபோலவே இருக்கிறது, புதுவை விவகாரத்தில்! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், சில ஆண்டுகளுக்கு முன் நடத்திய வித்தலை நாடகத்தைப் பார்த்தாவது, பிரெஞ்சிந்திய மேற்பார்வைக் கட்டிகாவலை காத்து வரும் பிரான்சு, தன் போக்கை நிச்சயித்துக் கொண்டு இருக்க வேண்டும். சொந்தமாகச் சிந்தித்து நல்வழிபடும் அருங்குணமும், பிறர் போக்கைப் பார்த்து பார்வை பெறும் பெருங்குணமும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குத் துளியும் கிடையாது என்பதை, புதுவை விவகாரமும், இந்தோ-சீனப் போரும் தெளிவு படுத்தி விட்டன.

சருகைப் கசக்கினால்தான் இஞ்சுவை சார் கிடைக்கும்! பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் அந்த இனத்தைச் சேர்ந்தது தான் என்பதை புதுவை விவகாரம் ஐயத்திற்கிடமின்றி தெளிவாக்கி விட்டது!

வருந்துகிறோம்

சென்னை, வண்ணையம்பதியில் திராவிட மாணவர்களின் எதிர்கால வாழ்வை வளமுள்ளதாக்கும் கல்லூரி ஒன்று காலஞ்சென்ற திராவிட செம்மல் சர். பி. தியாகராயரின் பெயரில் இருப்பது திராவிடர்களின் பெருமைக்கு உரியதாகும்.

அக்கல்லூரியை உருவாக்க உழைத்தவரான தோழர் பி. இராமசாமி அவர்கள் சென்ற திங்கள் 28-ம் நாள் இயற்கை எய்தினார்கள் என்ற செய்தியைத் தமிழகம் கேட்டு அயராத்தில் ஆழ்ந்தது என்றால் அது மிகையாகாது.

நல்லவர்கள், நாட்டின் மேன்மைக்கு உழைப்பவர்கள் நீண்டகாலம் வாழ இயற்கை ஒப்புக்கொள்வதில்லை.

காலஞ்சென்ற தோழர் இராமசாமி, திராவிடப் பேரறிஞர் பி. தியாகராயர் அவர்களின் பேரனும், வழக்கறிஞர் பி. சின்னசாமி அவர்களின் திருமகனுமாவார்.

கல்வி அறிவிலும், சமுதாயப் பணியிலும் திராவிட நாட்டில் சிறப்புப் பெற்ற குடும்பத்தில் பிறந்த தோழர் இராமசாமி அவர்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், பின்னர், கிண்டி பொறி இயல் கல்லூரியிலும் கல்வி பயின்று எஞ்சினியரானார்.

சென்னை கார்ப்பரேஷனில் 20 ஆண்டுகாலமாக அவர் எஞ்சினியராகப் பணியாற்றினார். தொழில் திறமையும், கல்வி அறிவும் நிறைந்த தோழர் இராமசாமியின் உள்ளம், தான் பிறந்த நாட்டு மக்கள் வாழ்வில் வளம் காண விரும்பியது; நாட்டு மக்களிடையே காணப்படும் அறியாமை ஒழிய வேண்டுமென எண்ணினார்; கல்விச்சாலைகள் பல தோன்ற வேண்டுமென்று கருதினார்; நாட்டின் எதிர்காலக் குடிமக்களான மாணவர்களின் முன்னேற்றமே சமுதாய வளர்ச்சிக்கு அடிகோலும் என்று அவர் நம்பினார்.

அந்த நம்பிக்கையின் முடிவுதான் இன்று வண்ணையம்பதியில் எழும்பியிருக்கும் தியாகராயர் கல்லூரி!

சிலருடைய வாழ்வின் இனிமையிருக்கும்; குடும்பம் செல்வத்திலே புரளும்; தொழில் துறையில் நிபுணர்களாயிருப்பார்கள்; விரும்பினால், நல்ல பல அரிய காரியங்களைச் செய்ய வாய்ப்பும் வசதியும் இருக்கும். ஆனால், தான் பிறந்த சமுதாயத்தின் வளர்ச்சிக்கு—அதன் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டுமென்ற விருப்பம் பலருக்குத் தோன்றுவது இயலாது.

தோழர் இராமசாமி நீண்டகாலமாகவே பெருந்தன்மையிலும், சமுதாயப் பணியிலும் சிறந்து பெற்றிருக்கிற குடும்பத்தைச் சார்ந்தவர்; வாழ்நாளில், தன்னால் முடிந்தவரை கல்வியின் மேன்மைக்கு உழைத்தவர்; வட சென்னை இந்து பெண் பாடசாலை நிர்வாகக் குழுவின் உபதலைவராகவும் பணியாற்றியவர்.

தியாகராயர் கல்லூரியை உருவாக்கிய அவரது உழைப்பை யாரும் மறக்க இயலாது. அந்த உழைப்புதான் அவரது உடல் நலிவுக்குக் காரணம் என்று அறியும் போது, அவரது மறைவினால் மாணவர் சமுதாயம் எத்துணை சிறந்த ஆதரவாளரை இழந்துவிட்டது என்று எண்ணும் போது நமது துயரம் அதிகமாகிறது.

அவரது பணியினைப் பாராட்டுகிறோம். வாழ்க அவர் புகழ்—வளர்க அவர் தம் நற்பணி—என்று வாழ்த்துகிறோம்.

தோழர் இராமசாமி அவர்களின் மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கல்வியறிவால் குழந்தைப் பேற்றை கட்டுப்படுத்தலாம்

டாக்டர் சந்திரசேகர் கருத்து

முஸ்லிம் பெண்களுக்கே அதிக குழந்தைகள் பிறக்கின்றன!

ஐ. நா. ஜூன் 3—"நகரங்களைக் காட்டிலும் கிராமங்களில் உள்ள ஆண்மக்கள் முன்கூட்டியே இறந்துபோவதால் கிராமத்துப் பெண்களின் வாழ்வு நலிந்து போகிறது." என்று, ஐ. நா. சபையின் மக்கள் எண்ணிக்கை ஆராய்ச்சியாளர் டாக்டர் சந்திரசேகரன் கூறுகிறார்.

மைசூர் ராஜ்யத்தில் 10,000-க்கு மேற்பட்ட குடும்பங்களைக் கண்டு பேசிய பின்னர் தான், இந்த விவரத்தை அவர் வெளியிட்டிருக்கிறார்.

குழந்தைப் பேறு நகரத்துப் பெண்களுக்கு 53 என்றும், கிராமத்துப் பெண்களுக்கு 48 என்றும் இருக்கிறதாம்!

நாற்பதுக்கு வயதிற்கு மேல் மைசூர் பகுதியில் பெண்களின் வாழ்வு பெரும்பான்மையாக துயரம் நிறைந்து காணப்படுகிறது. பெண்களின் கல்வி, மதம் இவைகளைப் பொறுத்தும் குழந்தைப் பேற்றில் மாறுதல் காணப்படுகிறது.

முஸ்லிம் பெண்களுக்கு இந்து பெண்களைக் காட்டிலும் அதிகமாகக் குழந்தைகள் பிறக்கின்றனவாம்!

அதேபோல், இந்து பெண்களுக்கு கிறுஸ்தவப் பெண்களைக் காட்டிலும் அதிகமாகக் குழந்தைகள் பிறக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

பெங்களூர் போன்ற நகரங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவது, அதிகக் குழந்தைகள் கூடாது என்ற எண்ணமே!

குழந்தைகளின் எண்ணிக்கை பற்றி கிராமத்துப் பெண்களில் 10 சதவிகிதத்தினர்தான் கவலை காட்டுகின்றனர்; ஆனால் நகரத்துப் பெண்களில் 25 சதவிகிதத்தினர் குழந்தைகள் பற்றிக் கவலைப்படுகின்றனர்.

இந்த ஆராய்ச்சியின் போது பெண்கள் அளித்த பதில்களை, அப்பெண்களின் கணவன்மார்களிடமும் கேட்டு சரிபார்த்துக் கொண்டதாக டாக்டர் சந்திரசேகர் கூறுகிறார்.

வாழ்க்கைத்தரம் உயர்ந்தால் நாட்டில் விதவைகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என்று அவர் மேலும் கூறுகிறார்.

ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு சொற்பொழிவுகள்

அத்தாணி, பாசூர், கவுந்தம்பாடி, குன்னத்தூர், சூலூர் தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

25-5-54 மாலை 7 மணிக்கு அத்தாணி ரேடியோ மைதானத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் ரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். அப்பாவு, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் புதிய கல்வித் திட்டம் ஒழிந்த வெற்றி குறித்தும், தி. மு. கழக கொள்கைகள் குறித்தும் பேசினார்கள்.

• • •

27—5—54 மாலை 7 மணிக்கு பாசூர் மயிலடி மைதானத்தில் தி. மு. கழக ஆண்டு விழா தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. மறைந்த தோழர் சின்னுசாமி படத்தை தோழர் சுந்தரம் திறந்துவைத்துப் பேசினார். பின்னர் தோழர்கள் சிறுவன் ஏ. சுப்பிரமணியம், எஸ். அப்பாவு, ஈ. வெ. கி. சம்பத் ஆகியவர்கள் தி. மு. கழகக் கொள்கைகள் குறித்துப்பேசினர்.

* * *

28—5—54 மாலை 7 மணிக்கு கவுந்தப்பாடி சந்தைப்பேட்டை திடலில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் எம். பி. முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். அப்பாவு, ஈ. வெ. கி. சம்பத் ஆகியவர்கள் ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்தும், தி. மு. கழகக் கொள்கைகளை குறித்தும் பேசினர்.

* * *

29—5—54 மாலை 7 மணிக்கு குன்னத்தூர் சந்தைப்பேட்டை திடலில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் அய்யாவு தலைமை வகித்தார். தோழர்கள் எஸ். அப்பாவு, ஈ. வெ. கி. சம்பத் பேசினர்.

* * *

30—5—54 மதியம் 1 மணியளவில் உதகை போஸ் மைதானத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் அண்ணா முரசொலி மன்றத்தின் சார்பில், தோழர் எஸ். அப்பாவு தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கழகக் கொள்கைகள் குறித்தும், புதிய கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்தும், வடநாட்டு ஆதிக்கம் குறித்தும், தனியரசு தேவை குறித்தும் பேசினார்.

அன்று மாலை 7 மணிக்கு சூலூர் பெரியார் மைதானத்தில் தி. மு. கழகச் சார்பில் வெற்றி விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் என். என். அப்புசாமி தலைமை வகித்து தீர்மானங்கள் நிறைவேற்றினார். பின்னர், தோழர்கள் எஸ். அப்பாவு, ஈ. வெ. கி. சம்பத் ஆகியவர்கள் கழகக் கொள்கை குறித்தும், புதிய கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்தும், வடவர் ஆதிக்கம், தனி நாடு தேவை குறித்தும் பேசினர்.

வெள்ளையர் கம்பெனியின் எண்ணெய் உற்பத்தி

—— (:) ——

இந்திய சர்க்காருக்கு ரூபாய் ஆறு கோடி லாபமாம்

25 கோடி ரூபாய் மூலதனத்தில், பம்பாய் அருகில் உள்ள டிராம்பேயில் பர்மா ஷெல் கம்பெனியார் ஒரு எண்ணெய் சுத்திசாலையை நிறுவியுள்ளனர்.

450 ஏக்கர் பரப்புள்ள அந்த எண்ணெய் சுத்திசாலை 1955-ல் வேலையைத் துவங்கும்.

வருடந்தோறும் அந்த உற்பத்திசாலை தயாரிக்கும் எண்ணெய் உற்பத்தி விவரம்:—

	காலன்கள்
மோட்டார் ஸ்பிரிட்	15,60,00,000
மண்ணெண்ணெய்	7,20,00,000
டீசல் எண்ணெய் (அதிக வேகத்திற்கானது)	3,70,00,000
டீசல் எண்ணெய் (மெதுவான வேகத்திற்கானது)	3,30,00,000
உலைக்களத்திற்கான எண்ணெய்	15,00,00,000
கீல் எண்ணெய்	1,50,000

ஆகியவற்றை உற்பத்தி செய்யும்.

இந்த உற்பத்தி நடைமுறை விநியோகத்திற்கு வரும்போது, இந்திய சர்க்கார் வெளிநாட்டுப் பொருள் மாற்றத்தில் 4 முதல் 6 கோடி ரூபாய் வரை மிச்சப்படுத்தலாம்.

போட்டிப் பந்தயங்களைத் தடை செய்யவும்

சேலம் நகரசபை தீர்மானம்

குதிரைப் பந்தயத்தைத் தடை செய்ய வேண்டுமென்று சென்னை, டில்லி அரசாங்கத்தினரைக் கேட்டுக் கொண்டு சேலம் நகரசபையில் தீர்மானம் ஒன்று நிறைவேறியது. இத்தீர்மானத்தை தோழர் ஏ மாரியப்பன் முன்மொழிந்தார்.

எஞ்சின் பாய்லர்கள்

கனடாவின் அன்பளிப்பு

புதுடில்லி, மே 31—

கொழும்பு திட்டத்தின்படி இந்தியாவுக்கு கனடா அளிக்க ஒப்புக் கொண்ட எஞ்சின் பாய்லர்களில் ஒரு பகுதி சித்தரஞ்சன் ரயில்வே தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தது.

இத்திட்டப்படி கனடா இனிமேல் 50 டபிள்யு. ஜி. பாய்லர்களையும் 120 டபிள்யு. பி. எஞ்சின்களையும் இந்தியாவுக்கு அனுப்பும்; இதன் மதிப்பு ரூ. 8,44,00,000 ஆகும்.

இது பற்றிய ஏற்பாடுகளுக்காக இந்திய ரயில்வே அதிகாரி ஒருவர் கனடாவில் தங்கியிருக்கிறார்.

புகையிலை விதையில் எண்ணெய்

உணவுப் பொருளாகவும் உபயோகிக்கலாமாம்

புகையிலை விதைகளிலிருந்து விரைவில் உலரக்கூடிய, அர்த்தமற்ற மஞ்சள் நிறமுள்ள ஒருவகை எண்ணெய், இடைப்பாக சமீபத்தில் தேசிய ரசாயன ஆராய்ச்சிக் கூடத்தில் செய்த பரிசோதனைகளிலிருந்து தெரிய வருகிறது.

இந்த எண்ணெய் உணவுப் பொருள் தயாரிக்க உதவுவதுடன், சோப் தயாரிக்கவும், பெயின்ட், வார்னிஷ் முதலியன செய்வதற்கும் உபயோகப்படுகிறது. மேலும் ரொட்டி தயாரிப்பதற்கும் இது உபயோகப்படுகிறதாம்.

சென்னை மாநிலத்திலிருந்து கிடைத்த 8100 டன் புகையிலை விதை இப்போது. தேசிய ரசாயன ஆராய்ச்சி நிலையத்திலிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள்

அடையாள கார்டுகள் வழங்கப்படும்

புதுடில்லி, ஜூன் 3—

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இனிமேல் ரயில் பிரயாணம் செய்ய டிக்கெட்டுகளுக்குப் பதில் அடையாள கார்டுகள் வழங்கப்படும்.

இரண்டாம் வகுப்புக்கான இக்கார்டுகளைக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய யூனியனின் எப்பகுதியிலும் பிரயாணம் செய்யலாம்.

இப்போது அளிக்கப்படும் அடையாளக் கார்டுகளில் உறுப்பினர்களின் புகைப்படம் இல்லை; ஆகவே ஆள் மாறாட்டம் ஏற்படுவதைத் தடுக்க அடுத்த கூட்டத்தின்போது புகைப்படத்துடன் கூடிய கார்டுகள் வழங்கப்படும் என்று தெரிகிறது.

வழக்கு வாபஸ்!

திருவனந்தபுரம், ஜூன் 1—

திரு—கொச்சி அரசாங்கம், மாநில உயர்தரப் போலீஸ் அதிகாரியின் சிபாரிசுப்படி 106 குற்ற வழக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதி தந்துள்ளது. இந்த வழக்குகளில் சுமார் 1000 பேர் வரை ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவர்களில் 189 பேர்கள் மாணவர்கள். மிகுதிப் பேர், தொழிலாளர்கள் என அறிவிக்கப்படுகிறது.

மாமேதிகள் அறப்போர்

ஜூன் 14 முதல் நடத்த முடிவு

ஆந்திர ராஜ்யக் கள் இறக்குவோர் சங்கம் ஜூன் 14-ந் தேதிக்குள் ஆந்திர சர்க்கார் கள் இறக்குவதை அனுமதிக்காவிட்டால் ராஜ்யமெங்கும் சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்துள்ளது.

இதுபற்றி கவர்னருடன்தான் பேசியதை தோழர் லட்சன்னு கூட்டத்தில் கூறினார்.

நாட்டில் மாமேதிகளிடையே காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்கவும், லஞ்சத்தை ஒழிக்கவும், கள் இறக்குவதை அனுமதிப்பதைத் தவிர வேறு ஏதும் வழி கிடையாது என்று மேற்படி சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் கருதுகின்றனர்.

கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று. ஆந்திர சட்டசபையின் தீர்மானத்தை அமுல் செய்ய ஆந்திர சர்க்கார் தவறினால், நாட்டில் கொந்தளிப்பும், விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நடைபெறலாம் என்று கூறுகிறது.

மசூலிப் பட்டணத்தில் சத்தியாக்கிரகம் செய்த ஆறு மாமேதிகளுக்கு ஒரு மூன்று கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இனிப்பான செய்தி!

இந்திய அரசாங்க, வட்டார உணவு அதிகாரி சென்னைக்கு அண்மையில் 20,000 டன் சர்க்கரை வரும் என்று கூறினார். தேவை எவ்வளவு உள்ளதோ அதைப் பொறுத்துத்தான் சர்க்கரை விநியோகம் இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார். மொரிசிக்கு, 12,000 டன் சர்க்கரை கிடைக்குமாம்.

S. P. T.
சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக்கூடம்
SANKARAN PROGRESSIVE TUTORIALS

கருணாநிதி பார்க், தெப்பக்குளம் P. O. திருச்சி.

உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, என்ஜினியரிங் பரீட்சைகளுக்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்

ஆரம்பம்: 9—6—54

மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிப்பதில் திறமையும் அனுபவமும் மிக்க பேராசிரியர்கள் உள்ளனர்

STAFF:

Mr. N. J. தேவதாஸ், M.A.	Mr. G. ரத்தினம், B.Sc.
Mrs ஜூடித் ஹுவிஸ், B.A. (Hons)	„ A. பாலசுப்ரமணியன், B.Sc
Mr. I. திவ்வியநாதன், B.A. (Hons.)	„ D. A. சாமி (விஷாரத்) வித்வான் சோழகர்
„ வெங்கட்ராமன், M.A.L.T.	„ K. ஜான், B.A.
	„ ஹுவிஸ் பீட்டர், B.A.
„ N. பிச்சை B.A. (Hons.)	„ R. சுப்ரமணியம், B.A.
„ M. வெங்கட்ராமன், M.A.B.Com.	„ C. சாமி, B.A. என்ஜினியரிங்
„ N. S. கிருஷ்ணசாமி M.A.	Mr. M. பாலகிருஷ்ணன், B.E.
„ V. துரைராஜ், B.Sc. B.T.	„ M. K. நடராஜன், B.E.
„ R. ஜான்சன், B.A.B.T. (Dip. in Geo.)	„ P. சங்கரன், B.E.

வைஸ்-பிரின்சிபால்: Mrs. ஜூடித் லூயிஸ், B.A. (Hons.) (கோவை அரசினர் கல்லூரி முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர்)

பிரின்சிபால்: Mr. N. J. தேவதாஸ், M.A. (திருச்சி நகரில் தனிப் பயிற்சிக்கூடங்கள் நிறுவியவர்களில் முதன்மையானவர்)

அலுவலகம்: 16, நந்தி கோவில் தெரு, தெப்பக்குளம் P.O., திருச்சி

I. திவ்வியநாதன், B.A. (Hons.) செயலாளர்.

விபரங்களுக்கு கான்ஸலை ஸ்டாம்புடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்:—

செயலாளர், சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக்கூடம், தெப்பக்குளம் P. O., திருச்சி

கல்வித் திட்ட ஒழிப்பு: நாடெங்கும் வெற்றி விழா

சென்னையில்:

ஏழுகிணறு

கழகப் பணி மனையில் விழா நடைபெற்றது. தோழியர் அருள்மொழி கழகக் கொடியை ஏற்றினார். இனிப்பு வழங்கப்பட்டது.

மவுண்ட்ரோட்

தோழர் இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. வெங்கடேசன், நாராயணன், சேரன், பா. கலைஞன், மா. போகன், மா. செ. தேமூர்த்தி ஆகியோர் பேசினர். தேநீர் விருந்து நடைபெற்றது; இனிப்புகள் வழங்கப்பட்டன.

தேனாம்பேட்டை

வேளாளத் தேனாம்பேட்டை தமிழ் இளைஞர் கழகக் கட்டிடத்திலும், வீதியும் நன்றாக அலங்கரிக்கப்பட்டன. மாலையில் தேநீர் விருந்தும், கழக இசைக் குழுவினரால் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நுங்கம்பாக்கம்

28—5—54 மாலை 6 மணிக்கு தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது; அதுசமயம் தோழர்கள் மு. கருணாநிதி, சங்கரநாராயணன், ஆர். டி. அரசு எஸ். எஸ். ராஜேந்திரன் ஆகியோர் பேசினர்.

பல்லாவரம்

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. கழகக் கட்டிடம் அலங்கரிக்கப்பட்டிருந்தது கூடியிருந்த பெரியோர்களுக்கு வெற்றி விழா என்பது பற்றி தோழர்கள் பாலகிருஷ்ணன், இ. பி. அருணாசலம் ஆகியோர் பேசினர்.

கோரமங்கலம்

கொடியேற்றி சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கி விழாக் கொண்டாடப்பட்டது.

கல்லாவி

மாணவர்களால் ஊர்வலம் நடத்தப்பட்டு இளஞ் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கோவிலடி

தோழர் ராமசாமி தலைமையில் ஊர்வலமும் கூட்டமும் நடைபெற்றது. பலர் பேசினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சோழவந்தான்

பன்னீர் செல்வம் படிப்பகத்தின் சார்பில் வெற்றி விழா; சிறுவர்களுக்கு தின்பண்டம் வழங்கி நடைபெற்றது.

மூகவூர்

அண்ணா படிப்பகத்தின் சார்பில் வெற்றிவிழாக் கூட்டமும் இனிப்பும் வழங்கப்பட்டது.

மணக்கால்

ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் சோமு பேசினார். சிறுவர்களுக்கு இனிப்பு தரப்பட்டது.

விளாப்பாக்கம்

ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் நீலகண்டன் பேசினார். மாணவச் சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கடையநல்லூர்

தி. மா. மு கழகச் செயற்குழு கூடி மகிழ்ச்சி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

திருவண்ணாமலை

தோழர் சலீம் தலைமையில் தோழர்கள் ராசமாணிக்கம், ப. உ சண்முகம் முதலியோர் பேசினர். சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கோகூர்

தோழர் இரத்தினவேலு தலைமையில் வெற்றிவிழா நடைபெற்றது. மாணவச் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

குனியமுத்தூர்:

கல்வித் திட்டம் தரும் கேடுகள் குறித்து ஓவியர் திருவேங்கடம் அவர்களால் வரையப்பட்ட படங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. சிறுர்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது.

சோழங்கநல்லூர்:

சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டதுடன் தோழர் சாமிநாதன் தலைமையில் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கோவிந்தராசன், மு. சண்முகம், பிச்சைமணி ஆகியோர் பேசினர்.

புத்திரகவுண்டன்பாளையம்

கழகக் கட்டிடம் அலங்கரிக்கப்பட்டதுடன் குழந்தைகளுக்கு இனிப்பு, பொரிகடலை முதலியன வழங்கப்பட்டது.

நாமக்கல் வட்டம்

கழகக் கட்டிடம் அலங்கரிக்கப்பட்டதுடன், சிறுவர்களுக்குத் தின்பண்டம் வழங்கப்பட்டது மாலையில் தோழர் செல்லப்பன் தலைமையில், சென்னைக்கு வசதியில் சென்று முதன் மந்திரியை 13—5—54 அன்று பேட்டி கண்டு புதிய கல்வித் திட்டத்தைக் கைவிடுமாறு கோரிக்கையை வற்புறுத்திய நாமக்கல் வட்ட ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி பி. கே. திவாகராச ரெட்டியார், எம். எல். சி., கே. வி. ராமசாமி, எம் எல். ஏ, ஆகியோர் பேசினர்

திருப்புகலூர்

தோழர் சவுரிராசன் தலைமையில் பொது உறுப்பினர் கூட்டமும், சிறுர்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது.

புதுப்பட்டி

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டதுடன் தோழர் சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பலர் பேசினர்.

குருக்கத்தி

தோழர்கள் சிங்காரம், செங்கையன், சந்தானம், கே. எஸ். வி. நாதன் ஆகியோர் வெற்றி விழா கூட்டமொன்றில் பேசினர்.

எருமப்பட்டி

மாபெரும் ஊர்வலம் நடத்தப்பட்டது. பொதுக் கூட்டம் ஒன்றில் தோழர்கள் சாமிநாதன், இராமதாசன், இந்திரஜித் ஆகியோர் பேசினர்.

திருவில்லிபுத்தூர்

குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. சிறை சென்ற தோழர் சோமுக்கு வரவேற்பும், பாராட்டும் செயலாளர் பொன்னரசப்பன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

சிவகங்கை

தோழர் க. இரா. சந்திரசேகரன் தலைமையில் தோழர்கள் சுப்ரமணியம், சண்முகநாதன், கார்த்தி, மணவாளன் ஆகியோர் பேசினர்.

ஏஜெண்டுகள் தேவை

“நம் நாடு” தின இதழ் விற்பனை செய்ய கீழ்க்கண்ட நகரங்கட்கு, இதழ் 1-க்கு ரூ. 2—0—0 வீதம் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் (ஏஜெண்டுகள்) தேவை. விபரங்கட்கு எழுதவும்.

திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
காஞ்சீபுரம்
திருப்பத்தூர் (வ. ஆ.)
செங்கற்பட்டு
புதுச்சேரி

ராயபுரம், சென்னை-13 28—5—54

பொறுப்பாளர், ‘நம் நாடு’

உலக அரங்கில்

பாரிஸ் :
பிரெஞ்சிந்திய பற்றி இந்திய - பிரான்சிடையே பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இப்பேச்சுவார்த்தைகள் முறிந்துபோகும் என்று முன்னர் வந்த செய்திகள் கூறின. தொடர்ந்து பேச்சுக்களை நடத்த என்ன முன்னேற்றம் ஏற்பட்டது என்பதைக் கூற பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர்.

* * *

தொகல் கட்சியைச் சேர்ந்த பெடரிக் டிடூராண்ட் என்பவர் பிரெஞ்சு மந்திரி சபையில் இந்தோ-சீன விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

★

வாஷிங்டன் :
தென் கிழக்கு ஆசிய சம்பந்தமாய் 5 வல்லரசுகளிடையே அமெரிக்க இராணுவத் தலைமைக் காரியாலயத்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.

* * *

தனது தேசங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு அணுசக்தி விபரங்களைக் கூற அனுமதிக்கும் முறையில் அணுசக்தி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று அமெரிக்க இராஜாங்கக் காரியதரிசி டல்லஸ் அமெரிக்க காங்கிரசில் பிரேரபித்தார்.

★

மாஸ்கோ :
மாஸ்கோவில் நடைபெறும் பொருட்காட்சி ஒன்றில் சோவியத் கலைஞர் அலெக்சாண்டர் செராசிமோவ் எழுதிய பண்டித நேருவின் படமொன்று வைக்கப்பட்டிருக்கிறது என்று 'டாஸ்' தெரிவிக்கிறது.

★

நியூயார்க் :
ரஷியா எதிர்த்த பின்னரும், இந்தோ-சீன எல்லைக்கு பார்வையாளர்கள் குழு ஒன்றை அனுப்ப வேண்டுமென்ற தாய்லாந்தின் கோரிக்கையைப் பரிசீலிக்க ஐ. நா. பாதுகாப்பு கவுன்சில் முடிவு செய்தது.

★

ஜினீவா :
இந்தோ-சீனப் போர் நிறுத்த மேற்பார்வைக்கு ஐ. நா. கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு வியட்நாம் அபவ்நாட்டிலாக அமைச்சர் ஜினீவா மாநாட்டில் வற்புறுத்தினார். சீனா, இப்பிரேரணையை நிராகரித்திருக்கிறது.

* * *

பிரிட்டிஷ் பிரதிநிதி ஈடனும், பிரெஞ்சுப் பிரதிநிதி பிடால்டும் அடுத்த வாரம் தங்கள் நாடுகளுக்குச் சென்று இந்தோ—சீனப் பேச்சு வார்த்தைகள் பற்றி தங்கள் சர்க்காரிடம் கூறுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

★

சியோல் :
போரில் நாசமடைந்துபோன தென் கொரியாவின் முன்னேற்றத்திற்கும், நிலக்கரி, மின்சக்தி ஆகியவைகளின் உற்பத்திக்கும் தென் கொரியாவும், அமெரிக்காவும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன.

• • •

சின்காவில் ஜூன் 15-ல் நடைபெறப் போகும் தூரக் கிழக்கு ஆசிய கம்யூனிச எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொள்ள இயலாது என்று மலேயா சர்க்கார் அறிவித்து விட்டதாக தென் கொரிய அமைச்சர் ஒருவர் கூறினார்.

★

இரங்கூன் :
அமெரிக்கா பர்மாவுக்கு உதவ யோசனை கூறியது என்று வெளியான செய்தி தவறு என்று இந்தியாவில் உள்ள பர்மியத் தூதர் கூறினார்.

லண்டன் :
இந்தோ-சீனப் போர் நிறுத்த மேற்பார்வை கமிஷனில் மூன்று நியந்தினைகளுடன் பாகிஸ்தான் சேரத் தயார் என்று ஜபருல்லா கான் கூறினார். தென் கிழக்கு ஆசிய ஒப்பந்தம் பற்றி, தான், எதுவும் கூற முடியாது என்று அவர் மேலும் கூறினார்.

★

கேப்டவுன் :
மிஸ்டர் அலெக்சாண்டர் என்ற தென் ஆப்பிரிக்கப் பாராளுமன்ற பெண் உறுப்பினர் ஒருவர் தன்னைப் பார்லிமெண்டின் உள்ளே நுழையக்கூடாது என்று தடுத்தது தாக்கியதாகக் கூறி 5000 பவுன் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

★

கோலாலம்பூர் :
மே 30-ல் மத்திய மலேயா காட்டிற்குள் ஹெலிகாப்டர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியது. ஒரு பிரிட்டிஷ் சிப்பாய் மரணமடைந்தார்; மூன்று பேருக்குக் காயம் ஏற்பட்டது.

★

டெல் அவீவ் :
இஸ்ரேல்—சிரியா ஆயுதக் குறைப்பு மாநாட்டிலிருந்து இஸ்ரேல் பிரதிநிதிகள் வெளியேறினர். இஸ்ரேல் சிப்பாய்கள், இரண்டு அரேபியர்களைக் கொலை செய்தனர் என்ற சிரியாவின் புகாரை இக்கமிஷன் விசாரணை செய்கிறது.

★

வியன்னா :
ஆஸ்திரிய தேசிய பாங்கி $3\frac{1}{2}$-சத விகிதத்திற்கு தன்னுடைய பாங்கு வட்டியைக் குறைத்திருக்கிறது. சென்ற மாதம் மேற்கு ஜெர்மன் பாங்கியும் இதுபோல 3 சத விதமாக வட்டியைக் குறைத்தது.

★

ஓசாகா :
மில் துணிகளின் விலை குறைவதாலும், மார்க்கெட்டில் மந்தம் ஏற்பட்டிருப்பதாலும் ஜப்பான் வெளிநாட்டு ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்கிறது.

★

சைகோன் :
சைகோனுக்கும், சிவப்பு நதிப் பிரதேசத்திற்கும் இடையேயுள்ள அன்னும் பகுதியில் இருதரப்பினரும் கடுமையாகப் போரிடுகின்றனர் என்று தெரிகிறது.

★

டோக்கியோ :
தனது உலக சுற்றுப்பிரயாணத்தை ஜப்பான் பிரதமர் யோஷிடா ஒத்திவைத்து விட்டார் என்று தெரிகிறது. சில நாட்களுக்கு முன்னர் யோஷிடா தன் சுற்றுப்பிரயாணச் செலவுகளுக்கு முன்கூட்டியே அனுமதி பெற்றிருக்க வேண்டுமென்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பார்லிமெண்டில் கூறினார்கள்.

★

கெய்ரோ :
சவுதி அரேபியா அமெரிக்காவிடம் உதவி பெற ஒப்பந்தம் செய்துகொண்டு விட்டது என்று அரபு நாடுகளிடையே நிலவும் செய்தி தவறு என்று சவுதி அரேபியாவின் எகிப்து தூதர் கூறினார்.

★

வார்சேல்ஸ் :
பிரெஞ்சுப் பார்லிமெண்டின் வெளி விவகார கமிட்டியினர் ஐரோப்பிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை பிரான்ஸ் ஒப்புக் கொள்ளக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியது.

கழகக் கூட்டங்கள்

★

பெரியகுளம்

பெரியார் திடலில்
6—6—54 மாலை 7 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

செங்குன்றபுரம்

தி. மு க. 3-ம் ஆண்டு விழா
6—6—54 மாலை $7\frac{1}{2}$ மணிக்கு
தலைவர் : மு. பிச்சை
பேசுவோர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
மதுரை மன்னன்
மு. தயாநிதி

திருத்துறைப்பூண்டி திருவள்ளுவர் கழகம்

6—6—54 அன்று, திருத்துறைப்பூண்டியில் திருவள்ளுவர் கழகத்தின் 2-வது ஆண்டு விழா நடைபெறும். தோழர் இரா நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

மதுரை மாவட்ட தி மு கழக 2-வது மாநாடு

வரவேற்புக் குழுக் கூட்ட அழைப்பு

"6—6—54 பகல் 2 மணி அளவில், பெரியகுளத்தில், நமது இரண்டாவது மாநாடு களில் தலைமை தாங்கவும், திறப்பு விழா ஆற்றவும், நாம் தேர்ந்தெடுத்தவர்கள் மற்ற மாவட்ட மாநாடுகளில் தலைமை தாங்கவும், திறப்பு விழா ஆற்றவும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டபடியால், வேறு தலைவர், திறப்பாளர் தேர்ந்தெடுப்பதற்காக நமது வரவேற்புக் குழுக் கூட்டம் தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் முன்னிலையில் நடைபெறும். உறுப்பினர்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன்," என்று, தோழர் எஸ். தொந்தி அறிவிக்கிறார்.

மதுரை நகர் தி. மு. கழக செ. கு. உறுப்பினர்கட்கு

6—6—54 காலை 10 மணிக்கு மதுரை நகர் தி மு கழகச் செயற் குழுக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

திருமணங்கள்

6—6—54 காலை 9 மணி அளவில், தோழர் கண்ணதாசன் தலைமையில், தோழர் கா. பாண்டியனுக்கும், தோழியர் பத்மாவதிக்கும், சென்னை சேப்பாக்கம் எண் 72, சின்ன திருட்டினசாமி ரோட், து செ. சத்திரத்தில் நடக்கும் வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு தோழர்கள் என். வி. நடராசன், மா யோகன், மசெ ந. மூர்த்தி, பா. கலைஞன் ஆகியோர் பேசுவர்.

* * *

6—6—54 காலை 9 மணிக்கு 330, தங்கசாலை தெருவில், தோழர் எஸ் பி ஐ [illegible]-தோழியர் எஸ். கே. கிருட்டினவேணி திருமணம் நடைபெறும். மணமக்களைப் பாராட்டி தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், இளஞ்செழியன் ஏ இராசமன்னார், எம். சி ஆகியோர் பேசுவர்.

சிங்கப்பூர் :
பி ஓ ஏ சி விமான விபத்து பற்றிய விசாரணையில் ஜகார்த்தா—சிங்கப்பூர் இடையே விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட செய்தி உண்மையில்லை என்று சாட்சியம் கூறப்பட்டது.

செய்திக் கதிர்

தூண்டுதல்
நேப்பாளத்தில் இந்தியாவுக்கு எதிராக உணர்ச்சியைத் தூண்டிவிடுவதில் வல்லரசு கோஷ்டி ஒன்று அக்கறை கொண்டுள்ளதாக நேப்பாள பிரதமர் எம். பி. கொய்ராளா கூறினார். இந்தியப் பார்லிமெண்டு குழுவினருக்கு வரவேற்பளித்தபோதுதான் அவர் இப்படிக் கூறினார்.

★

ஆதரவு
டஞ்சலாமா, தலாய்லாமா ஆகிய இருவரும், இந்தியாவுக்கும்—சீனாவின திபேத் பகுதிக்கும் இடையே வர்த்தகம், இதர தொடர்புகள் பற்றி செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு ஆதரவு தெரிவித்து மோசேதுங்கிற்கு செய்தி அனுப்பினர்.

★

கண்டனம்
கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சி ஏற்பட்டிருப்பதை காரச்சியின் முஸ்லீம் லீக் தலைவர் எம். எச். உஸ்மானி கண்டித்து அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறார்.

★

நிலச் சீர்திருத்தம்
கிராமக் கைத்தொழில், நிலச்சீர்திருத்தம் இவை நிறைவேறுவதற்கு காங்கிரசு பெரியதோர் சமமுக்கியத்துவம் அளிக்கிறது என்றும், இரண்டும் ஏக காலத்தில் நடைபெற வேண்டுமென்றும் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி அகர்வால் கூறினார்.

★

தொகுதி நிர்ணயம்
சென்னை ராஜ்யத்தில் தொகுதிகள் நியமனம் பற்றி சென்னை சர்க்காரின் அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டதும் விரைவில் தொகுதி நிர்ணயக் கமிஷனிடம் தெரிவிக்கப்படும்.

அலவன்ஸ் உயர்வு
ஆசிரியர்களின் பஞ்சப்படி அலவன்ஸை மூன்றரை ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய் வரை உயர்த்தப்படும் என்றும், இப்போது 4 ஸ்ரீரங்கத்துக்கு பன்னிரண்டணா தரப்படுகிறது என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்.

★

விலை குறைவு
நெல்லூரில் அரிசி விலைகள் மிகவும் குறைந்து விட்டன. மார்க்கெட் மிகவும் மந்தமாக இருக்கிறதாம்.

★

உதவி
சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் இதுவரை மத்திய சர்க்கார் ரூ 7,33,055 சத உதவித்தொகையாகவும், கடனாகவும் அளித்திருக்கிறார்கள். ராஜஸ்தானம் மில்லுக்கு ரூ 43,000 கிடைத்ததாம்.

★

தடை
அரசியல் சட்டத்தின் வரையறுக்கப்பட்டவர்கள் முஸ்லீம்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் இந்தியப் பிரஜை எவரும் எந்த தேசத்திலிருந்தும் பட்டம் பெறக்கூடாது என்று மத்திய சர்க்கார் வெளிநாட்டிலாக உத்தரவிட்டிருக்கிறது.

★

சலுகை
இந்த அறிவிப்புப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கிராம ஆபீசர்களாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஷெட்யூல்டு, பூர்வீகக் குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பினர் நியமனத்துக்கு வயது வரையறை பிரயோகம் ஆகாது என்று அறிவிப்புப் பாதுகாப்புச் சட்ட விதிகளின் திருத்தங்கள் கூறுகின்றன.

தி.மு.க பொதுச்செயலாளர் அண்ணாதுரைக்கு

தாராபடவேடு — பஞ்சாயத்து வரவேற்பு

★

6—6—54 காலை 9 மணிக்கு தாராபடவேடு பஞ்சாயத்து (காட்டுப்பாடி) அலுவலகத்தில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்புத்தாள் வாசித்தளிக்கப்படும். செங்குட்டைப் பகுதியில் பஞ்சாயத்தால் புதியதாக நிறுவப்பட்டுள்ள தண்ணீர் சப்ளை குழாய்களை அன்று காலை 11 மணிக்கு பஞ்சாயத்து மெம்பர் தோழர் எம். வீரபத்திர முதலியார் தலைமையில் தோழர் அண்ணாதுரை திறந்து வைப்பார்.

என். வி. நடராசன் சுற்றுப்பயணம்

★

ஜூன் 5: பெத்துநாயக்கன் பேட்டை
6: சேத்துப்பட்டு (திருமணம்)
7: தொள்ளார்
8: செய்வேலி
9: வத்தராயன் இருந்து
10: சிறுமதுரை
11: ஆரணி
13: திண்டிவனம்
14: திருமேனியார் கோவில்
15: திருவெண்காடு
19, 20: வேலூர் மாவட்டம்
21: காட்டுமன்னார் கோயில்
26: இராசிபாளையம் (கூட்டம்)

கோவாவில் போர்ச்சுகல்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமும், அரசியல் அடிமைத்தனத்தை ஆதரித்து வாக்களிப்போர்களுக்கு! அடுத்த நாள் காய்ந்த வயிறுதான்—அந்த ஒரே ஒரு நாளில்தான் விருந்து உபசாரம்!

ஒரு நாள் விருந்தில், தனது அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளலாம் என போர்ச்சுகல் கனவு காண்கிறது! கேலிக் கூத்து! வெட்ககேடு!

ஏகாதிபத்திய ஆதரவாளர்களைக் கொண்டு, தனது ஆதிக்கத்தின் அருமை பெருமைகளைச் சித்தரித்து ஏதோ ஒன்று எழுதவும், அவைகளை, வெளிநாடுகளில் இலவசமாக வழங்கவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதாம்!

ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்தில், செய்யும் ஏற்பாடுகள் சரியாக இருக்கலாம் ஆனால் உரிமை வேட்கை அரசாங்கத்தின் இச் செயலைக் காரி உமிழும்! கடைகெட்ட செயலென கல்லிலே செதுக்கி வைக்கும்!

[illegible] முன்னேற்றக் கழக [illegible] தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள், அறிஞர் அண்ணாதுரை அவர்களிடம் பெற்று (இது, [illegible] செய்தித் தொ[illegible]) வெளியிட்டுள்ளது. [illegible] ஆசிரியர் : [illegible] அண்ணாதுரை, எம். ஏ.